DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 242/2015 PW : 1

Name : ரமேஷ் Age -

Father Name : Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 02.12.2024.

3 முதல் 5, 7 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1ம் பிரதிவாதி பஞ்சாயத்து தேர்தலில் தோல்வியுற்ற பிறகு கிராமத்தில் உள்ள பொது மக்களுக்கு முதியோர் ஓய்வூதியம், வங்கிகடன் பெற்றுதருவது போன்ற வேலைகளை செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு நமச்சிவாயபுர கிராமம் பூர்விகம் என்பதால் 1ம் பிரதிவாதி வெங்கடேசன் அதே ஊர்காரர் என்பதால் அந்த வகையில் எனக்கு பழக்கம். தவா சொத்து விற்பனைக்குள்ளது என்ற விவரம் யார் முலம் தெரியும் என்றால் 1ம் பிரதிவாதி முலம் தெரியும். நமச்சிவாயபுரம் கிராமத்தில் வழக்கு சொத்து விற்பனைக்குள்ள விவரம் நான் அடிக்கடி ஊருக்கு வந்து செல்வதால் எனக்கு தெரியும். தவா சொத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அவ்வாறு பார்த்தது எப்போது என்றால் விக்கரைய ஒப்பந்தம் போடுவதற்கு 3 அல்லது 4 மாதங்களுக்கு முன்பு தவா சொத்தை பார்த்துள்ளேன். அவ்வாறு தவா சொத்தை பார்க்கும்போது யார் உரிமையாளர் என்ற விவரம் எனக்கு தெரியவந்தது. தவா சொத்தின் உரிமையாளர் அம்மணியம்மாள். தவா சொத்து அம்மணியம்மாள் பெயரில் இருக்கும் போது எவ்வாறு வெங்கடேசன் விற்க இயலும் என்று கேட்டேன் என்றால் வெங்கடேசன் அம்மணியம்மாளின் பொது அதிகார முகவர் என்று கூறினார். அவ்வாறு வெங்கடேசன் கூறிய போது அம்மணியம்மாளிடம் சென்று நேரடியாக சொத்து விற்பனைக்குள்ளதா என்று கேட்டேனா என்றால் கேட்டேன். அவ்வாறு கேட்டபோது வெங்கடேசன் பெயரில் உள்ள பொது அதிகாரம் பற்றி கேட்டேனா என்றால் கேட்டேன். அவ்வாறு நான் கேட்டது 2015 ல் இருக்கும். அவ்வாறு நான் நேரடியாக சென்று அம்மணியம்மாளிடம் கேட்ட போது என்னுடைய தரப்பில்

யாரும் இல்லை. அம்மணியம்மாள் தரப்பில் யார் இருந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. விக்கரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு அம்மணியம்மாளை நான் நேரடியாக சென்று விசாரித்த விவரத்தை எனது அசல் வழக்குரையில் குறிப்பிட்டு வாதுரைக்கவில்லை என்றால் சரிதான். தவா சொத்தின் விக்கரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு அம்மணியம்மாளையோ அல்லது அவர் குடும்பத்தாரையும் சென்று பார்க்கவில்லை வழக்கிற்காக தவறான தகவலை நீதிமன்றத்தில் பதிவு செய்கிறேன் என்றால் சரியல்ல. பொதுஅதிகார முகவராக வெங்கடேசன் என்பவர் அம்மணியம்மாளிடம் பொது அதிகாரம் பெறுவதற்காக அம்மணியம்மாளுக்கு பணம் செலுத்தியதற்கான பணப்பற்று ரசீது ஏதேனும் என்னிடம் காண்பித்தாரா என்றால் இல்லை. அம்மணியம்மாளுக்கு தாவா சொத்து எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதற்கான அசல் ஆவணங்கள் ஏதேனும் 1ம் பிரதிவாதி வெங்கடேசன் என்னிடம் காண்பித்தாரா என்றால் இல்லை. தாவா விக்கரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு தாவா சொத்து தொடர்பாக வில்லங்க சான்றிதழ் சரி பார்த்தேனா என்றால் சரி பார்த்தேன். சார் பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்க சான்றிதழுக்கு கட்டணம் செலுத்தி சரிப்பார்த்தேனா என்றால் இணையவழி வாயிலாக சரிப்பார்த்தேன். அவ்வாறு சரிப்பார்த்த வில்லங்க சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வில்லங்க சான்றிதழ் 19.09.2015 இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து விக்கரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக வில்லங்க சான்றிதழ் சரிபார்க்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு பக்கத்தில் எனக்கு சொத்துகள் ஏதுமில்லை. தாவா சொத்தை பார்வையிட்டதால் எனக்கு நான்கு பக்க எல்லைகள் தெரியும் வடக்கு மற்றும் மேற்கு பக்கம் ரோடு, தெற்கு குப்புராஜா (எ) செங்கல்ராஜா, கிழக்கு பக்கம் குப்புராஜா (எ) செங்கல்ராஜா பங்காளிகள் நிலம். இந்த நான்கு பக்க எல்லைகளை குறிப்பிட்டு தான் தாவா ஒப்பந்தம் போட்டுள்ளேனா என்றால் இல்லை. தாவா விக்கரைய ஒப்பந்தம் எவ்வளவு விஷ்ணத்திற்கு போடப்பட்டது என்றால் 73 சென்ட்க்கு போடப்பட்டது. 73 சென்ட் ஒரே தளையா என்றால் ஒரே தளை தான், ஆனால் சர்வே எண்கள் இரண்டு. 53/1B மற்றும் 53/1C ஆகும். எதை வைத்து 53/1B மற்றும் 53/1C சர்வே எண்களை குறிப்பிடுகிறேன் என்றால் பொது அதிகார ஆவணத்தை வைத்து சொல்கிறேன். அதை தவிர்த்து வருவாய் ஆவணங்கள் ஏதேனும் பார்த்தேனா

என்றால் இல்லை. தாவா விக்கரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு வழக்கு சொத்தினை நில அளவை வைத்து அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்குண்டான விக்கரைய தொகையை யார் நிர்ணயித்தது என்றால் 1ம் பிரதிவாதி தான் நிர்ணயித்தார். அவ்வாறு நிர்ணயம் செய்த தொகை செண்டிற்கா அல்லது மொத்த விஸ்திரணத்திற்காக என்றால் செண்டிற்கு தான். செண்ட் ஒன்றுக்கு ரூபாய். 53,000 என 1ம் பிரதிவாதி நிர்ணயம் செய்தார். அவ்வாறு செண்ட் ஒன்றுக்கு ரூபாய். 53,000 என்பதை தாவா விக்கரைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

(3 முதல் 5, 7 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/. M.A. Kabeer,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்
திருவள்ளூர்,